**<u>2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,</u>**
**<u>திருவள்ளூர் @ பூந்தமல்லி</u>**

**முன்னிலை : திருமதி.கு.புவனேஸ்வரி, பி.எல்.,**
**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருவள்ளூர் @ பூந்தமல்லி**
**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் நாள் திங்கட்கிழமை**

**<u>Crl.MP 310/2021 ன் மேல்முறையீட்டு வழக்கு எண்.33/2021</u>**

M. அமலா,

... மனுதாரர் / மேல்முறையீட்டாளர்

..எதிர்..

1. G. சரவணகுமார்

2. கோவிந்தராஜ்

... எதிர்மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள்

இம்மனு 05.02.2026 அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் / மேல்முறையீட்டாளர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. A.R. பூவாணன், A. வாசுதேவன் மற்றும் S. லட்சுமி ஆகியோர் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. S.K. ஆடம் மற்றும் G. வெங்கடேசன் ஆகியோர் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலும் இருந்து வந்ததில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.03.26 20:36:23 +0530

**<u>உத்தரவு</u>**

இம்மனு மனுதாரர் / மேல்முறையீட்டாளர் தரப்பில் குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 391ன் கீழ் மனுதாரர், பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள கூடுதல் ஆவணங்களைத் தாக்கல் செய்வதற்கும், மேலதிக சாட்சியங்களுடன் கூடுதல் வாய்மொழிச் சாட்சியங்களை ஆஜர்படுத்துவதற்கும் அனுமதிக்க வேண்டும் அல்லது, மாற்றாக, மனுதாரரின் வழக்கை நிரூபிப்பதற்காகக் குறிப்பிட்ட சாட்சியங்களை விசாரணை நீதிமன்றத்தில் பதிவு செய்யுமாறு உத்தரவிட்டு, இந்த வழக்கை மீண்டும் அனுப்பி வைத்து உத்தரவிட வேண்டும் என்று கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரர் / மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்</u>:-

மேல்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட தாமதம், வரம்பு சட்டத்தின் பிரிவு 5-ன்படி, ஆட்சேபனைக்குப் பின்னர் நீக்கப்பட்டு, மேல்முறையீடு எண் வழங்கப்பட்டது. இந்த உத்தரவை எதிர்த்து எதிர்மனுதாரர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார், ஆனால் அந்த மறுஆய்வு மனு, இரண்டு மாதங்களுக்குள் மேல்முறையீட்டைத் தீர்த்துவைக்க உத்தரவிட்டு தள்ளுபடி செய்யப்பட்டது. திருமணம் தொடர்ந்து நிலைத்திருக்கும் நிலையிலும், குடும்ப வன்கொடுமை நடவடிக்கைகள் நிலுவையிலிருக்கும் நிலையிலும், முதல் எதிர்மனுதாரர் விவாகரத்து செய்யாமல் இரண்டாவதாக ரம்யா மனோகரனை மணந்து கொண்டார். இது இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவுகள் 498A, 313 மற்றும் 494-ன் கீழ் குற்றவழக்குக்கு வழிவகுத்தது, இது நிலுவையில் உள்ளது. இந்தச் சட்டத்திற்குப் புறம்பான திருமணத்தில்

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.03.26 20:36:28 +0530

ஆத்விக் குமார் என்ற குழந்தை பிறந்தது. இந்த உண்மைகள் முன்னர் மறைக்கப்பட்டு, பின்னர் வெளிச்சத்திற்கு வந்தன. ஜீவனாம்சம் வழங்கப்படாததால் மன மற்றும் உடல் ரீதியான கொடுமையை ஏற்படுத்தின. இடைக்கால மற்றும் நிரந்தர ஜீவனாம்ச உத்தரவுகள் பெறப்பட்டன, ஆனால் எதிர்மனுதாரர்கள் அவற்றை முழுமையாக நிறைவேற்றத் தவறிவிட்டார்.

மனுதாரர், முதல் எதிர்மனுதாரரின் சட்டத்திற்குப் புறம்பான உறவு மற்றும் கொடுமையை நிரூபிக்கும் வகையில், FIR, பாஸ்போர்ட் விவரங்கள் மற்றும் பிறப்புச் சான்றிதழ் உள்ளிட்ட கூடுதல் ஆவண மற்றும் வாய்மொழி சாட்சியங்களைத் தாக்கல் செய்ய விரும்புகிறார். இந்த உண்மைகள் 2018–ல் தான் தெரியவந்ததால், தற்போதைய மனுவைத் தாக்கல் செய்வதில் எந்தத் தாமதமும் இல்லை. மனுதாரர், கூடுதல் சாட்சியங்களை அனுமதிக்குமாறு அல்லது முறையான விசாரணைக்காக வழக்கை மீண்டும் அனுப்பி வைக்குமாறு நீதிமன்றத்தைக் கோருகிறார். மறுப்பது நீதியையும், குடும்ப வன்கொடுமை சட்டத்தின் நோக்கத்தையும் பாதிக்கும். எனவே மனுதாரர், பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள கூடுதல் ஆவணங்களைத் தாக்கல் செய்வதற்கும், மேலதிக சாட்சியங்களுடன் கூடுதல் வாய்மொழிச் சாட்சியங்களை ஆஜர்படுத்துவதற்கும் அனுமதிக்க வேண்டும் அல்லது, மாற்றாக, மனுதாரரின் வழக்கை நிரூபிப்பதற்காகக் குறிப்பிட்ட சாட்சியங்களை விசாரணை நீதிமன்றத்தில் பதிவு செய்யுமாறு உத்தரவிட்டு, இந்த வழக்கை மீண்டும் அனுப்பி வைத்து உத்தரவிட வேண்டும்.

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.03.26 20:36:32 +0530

**3. <u>எதிர்மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம் :–</u>**

முதல் எதிர்மனுதாரர், பாரா 2 மற்றும் 3–இல் கூறப்பட்டுள்ள பின்னணி உண்மைகளை ஒப்புக்கொள்கிறார். ஆனால், மற்ற அனைத்து குற்றச்சாட்டுகளும் பொய்யானவை, அவதூறானவை மற்றும் தொந்தரவு அளிப்பதற்கானவை. எதிர்மனுதாரர் இரண்டாவது திருமணம் செய்து கொண்டு ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தார் என்ற கூற்று குறிப்பாக மறுக்கப்படுகிறது. இதற்கு எந்த ஆதாரமும் இல்லை, கூறப்படும் பெண் அல்லது குழந்தைக்கும் எதிர்மனுதாரருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. குடும்ப வன்கொடுமை வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு, அவதூறு அறிவிப்பு அனுப்பப்பட்ட பின்னரே குற்றப் புகார் தாக்கல் செய்யப்பட்டது. தற்போதைய மேல்முறையீட்டிற்கும் அந்தப் பிந்தைய நடவடிக்கைகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. கூறப்படும் உண்மைகள் முன்னரே தெரிந்திருந்தும், முன்வைக்கப்படவில்லை குடும்ப வன்கொடுமைச் சட்டத்தின் கீழ் கொடுமை என்ற பிரச்சினைக்கு அவை தொடர்பற்றவை. ஜீவனாம்சம் முழுமையாக செலுத்தப்பட்டு விட்டது. செலுத்தாததாக ஏதேனும் கூற்று இருந்தால் அது ஆதாரமற்றது. ஏனெனில் நிறைவேற்று நடவடிக்கைகள் எதுவும் தொடங்கப்படவில்லை. கூறப்படும் இரண்டாவது திருமணம் தொடர்பான கூடுதல் ஆதாரங்களைத் தாக்கல் செய்வதற்கான முயற்சி, குற்ற நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 391–ன் கீழ் உள்ள மேல்முறையீட்டின் எல்லைக்கு அப்பாற்பட்டதாகும், மேலும் இது எதிர்மனுதாரர்களைத் தொந்தரவு செய்வதற்கான நோக்கத்தில் மட்டுமே உள்ளது. புதிய குற்றச்சாட்டுகள் முதல் எதிர்மனுதாரரை மட்டுமே

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.03.26 20:36:37 +0530

சார்ந்தவை. இவை இரண்டாவது எதிர்மனுதாரரை நியாயமின்றிப் பாதிக்கின்றன. இரண்டாவது எதிர்மனுதாரருக்கு இந்தக் கூற்றுகளில் எந்தப் பங்கும் இல்லை. நீதிமன்ற செயல்முறையைத் தவறாகப் பயன்படுத்துவதாகும். எனவே இம்மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. <u>தீர்வு செய்யப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்</u>:–

இம்மனுவில் கோரப்படும் பரிகாரங்கள் அனுமதிக்கக் கூடியதா? என்பதாகும்.

5. இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும் முன்னிடப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

6. <u>பிரச்சனை:–</u>

இருதரப்பும் கேட்கப்பட்டது ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் மேல்முறையீட்டு வழக்கில் மேல்முறையீட்டாளர் ஆவர். மனுதாரர்/மேல்முறையீட்டாளர் அம்பத்தூர், குற்றவியல் நடுவர் நீதிமன்ற நீதிபதி அவர்களால் D.V. No.21/2016 ன், 09.03.2018 அன்று வழங்கப்பட்ட தீர்ப்புரையை ரத்து செய்ய கோரி தாக்கல் செய்த மேல்முறையீட்டு வழக்கானது வாதுரைக்காக நிலுவையில் உள்ளது. இந்நிலையில் மனுதாரர்/மேல்முறையீட்டாளர் தரப்பில் இந்த இடைமனு தாக்கல் செய்யப்பட்டு திருமணம் தொடர்ந்து நிலைத்திருக்கும் நிலையிலும், குடும்ப வன்கொடுமை நடவடிக்கைகள் நிலுவையிலிருக்கும் நிலையிலும், முதல் எதிர்மனுதாரர் விவாகரத்து செய்யாமல் இரண்டாவதாக ரம்யா மனோகரனை மணந்து கொண்டதாகவும், இந்தச் சட்டத்திற்குப் புறம்பான திருமணத்தில் ஆத்விக் குமார் என்ற குழந்தை பிறந்தது என்றும் இந்த

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.03.26 20:36:41 +0530

உண்மைகள் முன்னர் மறைக்கப்பட்டு, பின்னர் வெளிச்சத்திற்கு வந்ததாகவும் ஜீவனாம்சம் வழங்கப்படாததால் மன மற்றும் உடல் ரீதியான கொடுமையை ஏற்படுத்தியதாகவும் இடைக்கால மற்றும் நிரந்தர ஜீவனாம்ச உத்தரவுகள் பெறப்பட்ட போதிலும் எதிர்மனுதாரர்கள் அவற்றை முழுமையாக நிறைவேற்றத் தவறிவிட்டார் என்றும்

மனுதாரர், எதிர்மனுதாரர்களின் சட்டத்திற்குப் புறம்பான உறவு மற்றும் கொடுமையை நிரூபிக்கும் வகையில், FIR, பாஸ்போர்ட் விவரங்கள் மற்றும் பிறப்புச் சான்றிதழ் உள்ளிட்ட கூடுதல் ஆவண மற்றும் வாய்மொழி சாட்சியங்களைத் தாக்கல் செய்ய விரும்புவதாகவும், இந்த உண்மைகள் 2018–ல் தான் தெரியவந்ததால், தற்போதைய மனுவைத் தாக்கல் செய்வதில் எந்தத் தாமதமும் இல்லை என்றும் எனவே மனுதாரர், கூடுதல் சாட்சியங்களை அனுமதிக்க வேண்டுமென்றும் அல்லது முறையான விசாரணைக்காக வழக்கை மீண்டும் அனுப்பி வைக்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ள பொருண்மைகள் எதிர்மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் தரப்பில் மறுத்துரைக்கப்பட்டு எதிர்மனுதாரர் இரண்டாவது திருமணம் செய்து கொண்டு ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தார் என்ற கூற்று குறிப்பாக மறுக்கப்படுவதாகவும், இதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்றும், கூறப்படும் பெண் அல்லது குழந்தைக்கும் எதிர்மனுதாரருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் குடும்ப வன்கொடுமை வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு, அவதூறு அறிவிப்பு அனுப்பப்பட்ட பின்னரே குற்றப் புகார் தாக்கல் செய்யப்பட்டதாகவும், தற்போதைய மேல்முறையீட்டிற்கும் அந்தப் பிந்தைய நடவடிக்கைகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் கூறப்படும்

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.03.26 20:36:46 +0530

உண்மைகள் முன்னரே தெரிந்திருந்தும், விசாரணை நீதிமன்றத்தில் முன்வைக்கப்படவில்லை என்றும் ஜீவனாம்சம் முழுமையாக செலுத்தப்பட்டு விட்டதாகவும், இது எதிர்மனுதாரர்களைத் தொந்தரவு செய்வதற்கான நோக்கத்தில் மட்டுமே உள்ளது என்றும் புதிய குற்றச்சாட்டுகள் முதல் எதிர்மனுதாரரை மட்டுமே சார்ந்தவை என்றும், இவை இரண்டாவது எதிர்மனுதாரரை நியாயமின்றிப் பாதிப்பதாகவும் எனவே இம்மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது.

**7.** மனுதாரர் தரப்பில் மனுதாரர், பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள கூடுதல் ஆவணங்களைத் தாக்கல் செய்வதற்கும், மேலதிக சாட்சியங்களுடன் கூடுதல் வாய்மொழிச் சாட்சியங்களை ஆஜர்படுத்துவதற்கு அனுமதிக்க வேண்டும் அல்லது, மாற்றாக, மனுதாரரின் வழக்கை நிரூபிப்பதற்காகக் குறிப்பிட்ட சாட்சியங்களை விசாரணை நீதிமன்றத்தில் பதிவு செய்யுமாறு உத்தரவிட்டு, இந்த வழக்கை மீண்டும் அனுப்பி வைக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் குறிப்பாக எந்த பொருண்மையை மெய்ப்பிப்பதற்காக யாரை மனுதாரர் கூடுதல் சாட்சியாக விசாரணை செய்ய உள்ளார் என்பது பற்றிய விவரங்கள் ஏதும் தெரிவிக்கப்படவில்லை. விசாரணை நீதிமன்றத்தில் மனுதாரர் ஏன் இந்த முயற்சிகளை மேற்கொள்ளவில்லை என்பதற்கான வலுவான காரணங்களும் முன்வைக்கப்படவில்லை. எனவே மனுதாரர்/மேல்முறையீட்டாளர் தரப்பில் மனுவில் கூடுதல் ஆவண விபரங்களை குறிப்பிட்டுள்ள நிலையில் அந்த கூடுதல் ஆவணங்களைத் தாக்கல் செய்வதைப் பொருத்து மட்டும் இம்மனுவை அனுமதிப்பது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.03.26 20:36:50 +0530

முடிவில், இம்மனு பகுதியாக அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினிமயமாக்கப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.03.26 20:36:54 +0530

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

<u>**இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**</u>**– இல்லை**

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.03.26 20:36:58 +0530

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**வரைவு/தெளிவு உத்தரவு**
**Crl.MP 310/2021 ன் மேல்முறையீட்டு**
**வழக்கு எண்.33/2021**
**நாள் 23.03.2026**
**2 வது கூ.மா.அ.நீ., பூந்தமல்லி.**